# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு -2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011-2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 20135411

E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


எனது இல.SEC/2017/05 2017.11.16

**பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் / பொது முகாமையாளர்கள் / வர்த்தக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளின் உள்நாட்டுத் தலைவர்கள்**

அன்புள்ள ஐயா / அம்மணி,

**வங்கிகளுக்கு வரி இசைவாணைச் சான்றிதழ்களினைச் சமர்ப்பித்தல்**

வர்த்தக வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட விற்பனையாளர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிச்செல்லும் அனுப்புகைகள் தொடர்பில் 2014.03.26 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட சுற்றறிக்கையானது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன். எனவே, தாங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த சுற்றறிக்கைக்கு இணங்கிச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, அனுப்புனரானவர் வெளிச்செல்லும் அனுப்புகைகளினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கத்திற்காக, அத்தகைய அனுப்புகையானது கீழே விதித்துரைக்கப்பட்டவாறான நோக்கத்திற்காக இருந்தாலன்றி,ஆணையாளர் நாயகத்திடமிருந்து இசைவாணைச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**பின்வரும் அனுப்புகைகளுக்கு இசைவாணச் சான்றிதழ்கள் தேவைப்பட மாட்டாது.**

(i) இலங்கையில் வதிவினைக் கொண்டுள்ள கம்பனிகளில் வதிவல்லாதவர்களுக்குச் சொந்தமான விலைகூறப்பட்ட பங்குகளின் விற்பனைச் சம்பாத்தியங்களின் அனுப்புகைகள்

(ii) பங்கிலாபங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரி செலுத்தப்பட்ட, வதிவல்லா பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்குலாபங்களின் அனுப்புகைகள்

(iii) இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, இலங்கையில் வதிவினைக் கொண்டுள்ள கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள்

(iv) ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருடாந்த இசைவாணைச் சான்றிதழ்களினைச் சமர்ப்பித்து(இந்த நோக்கத்திற்காக முன்னைய வரி மதிப்பீட்டாண்டுக்கான வருமன விபரத்திரட்டுடன் சமர்ப்பிக்கப்பட்ட

நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் வழங்கப்படும் வருடாந்த இசைவாணைச் சான்றிதழ்கள்), கேழ்வு அனுப்புதல்கள், கூரியர் சேவைகள் மற்றும் பயணிகள் மற்றும் பொருட்களினைக் கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள விமான சேவைக் கம்பனிகளுடன் தொடர்புடைய போக்குவரத்துச் செலவுகள்

(v) உழைக்கும் போது வரி செலுத்தும் (PAYE) திட்டத்தின் கீழ் வரி விதிப்பனவுக்குட்படும் கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஏனைய பயன்கள் உள்ளடங்கலான புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் (T10 சான்றிதழானது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்). T10 சான்றிதழானது சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஊழிய வருமானத்தின் விலக்களிப்பு தொடர்பில் அத்தகைய ஊழியர்கள் சார்பில் ஆணையாளர் நாயகத்திடமிருந்து தொழில் வழங்குனரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட இசைவாணைச் சான்றிதழின் பிரதியொன்றினைச் சமர்ப்பிக்குமாறு கோட்டுக் கொள்ளப்படுகின்றது.

(vi) விளம்பரம் மற்றும் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் சந்தைப்படுத்தல் தொடர்புடைய சேவைகள் தொடர்பில் ஏற்றுமதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் அனுப்புகைகள் (உள்நாட்டு இறைவரியிடமிருந்தான காலப்பகுதிக்குரிய இசைவாணக்கு உட்பட்டு).

(vii) இலங்கைக்கு வெளியே வியாபாரக் குறிகளினைப் பதிவு செய்தல் தொடர்பில் ஏற்றுமதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் அனுப்புகைகள்.

(viii) தொழில்சார் அமைப்புக்களின் உறுப்புரிமை, அல்லது நாளேடுகள், சஞ்சிகைகள் மற்றும ஏனைய வெளியீடுகளுக்கான வருடாந்த சந்தாப் பணம் தொடர்பான அனுப்புகைகள்.

(ix) மாணவர் கட்டணம், பரீட்சைக் கட்டணங்கள், பதிவுசெய்தல் கட்டணங்கள் மற்றும் அதனையொத்த கொடுப்பனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனுப்புகைகள்.

(x) விசா செலவுகள், வைத்திய செலவுகள் மற்றும் வெளிநாட்டுக் ஹோட்டல்களின் தங்குமிடச் செலவுகள் தொடர்பான அனுப்புகைகள்

(xi) வதிவுள்ள கம்பனிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களுக்கான மூலதன மீள் கொடுப்பனவுகள்

(xii) இலங்கைக்கு வெளியே உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்தான நேரடியான அறிவுறுத்தலகளுக்கிணங்க, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் (இலங்கையில் வதிவினைக் கொண்டுள்ள கணக்கு வைத்திருப்பவர் தவிர்ந்த).

(xiii) **தற்போது சர்வதேச அலகினால் 24 மணித்தியாலத்தினுள் வழங்கப்படும் இசைவாணைச் சான்றிதழானது,** தேவையான ஆவணங்கள்உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதனைப் பொறுத்து,எதிர்காலத்தில் அத்தகைய சேவையானது **வியாபார ஆலோசனை அலகினால்** வருமான நிருவாக தகவல் முறைமையினூடாக (RAMIS) வழங்கப்படும்.(இதன் அமுலாக்கத் திகதி பின்னர் அறியத்தரப்படும்)

வருமான வரிப் பொறுப்பு எதுவுமில்லையென சர்வதேச அலகுக்குப் பொறுப்பான ஆணையாளர் திருப்திப்படுவாராயின், அனுப்புனர் திறந்த இசைவாணைக்கு (Blanket Clearance) விண்ணப்பிக்க முடியும்.அத்தகைய இசைவாயானது குறித்த சில காலப்பகுதியினை உள்ளடக்கியதாக வழங்கப்படும். ஏதேனும் தகவல்களின் அடிப்படையில்,

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் வங்கிகளுக்கு வருகை தந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இசைவாணையின் அடிப்படையில் பணமானது சரியான முறையில் அனுப்பி வைக்கப்படுகின்றதா என்பது குறித்து விசாரணைகளினை மேற்கொள்ளலாம்.

வாடிக்கையாளருக்கு இது தொடர்பில் ஏதேனும் தகவல் தேவைப்படுமிடத்து, தயவு செய்து கீழ்க்காணும் அலுவலர்களுடன்தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தவும்.

**ஆணையாளர்**
சர்வதேச அலகு
01 ஆவது மாடி
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
திணைக்களம்
கொழும்பு 02
தொலைபேசி – 2135030

**உதவி ஆணையாளர்**
வியாபார ஆலோசனை அலகு
2 ஆவது மாடி
உள்நாட்டு இறைவரித்

கொழும்பு 02
தொலைபேசி – 2135135

தங்கள் உண்மையுள்ள

ஒப்பம் / ஐவன் திசாநாயக்க
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:

1. நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்
2. நாணயமாற்றுக் கட்டுப்பாட்டாளர், நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
3. பணிப்பாளர் , வங்கிகள் மேற்பார்வை கிளை
4. செயலாளர், வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதம்)

} அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட விற்பனையாளர்களுக்கு வழங்குவதற்காக

5. கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்